எம்.சி.ஓ.பி எண்: 3996 /2019 தேதி: 10.10.2025

மசா. : 2

பெயர் : பாண்டியன்

த/பெ. : குமார்

வயது :26

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசராணை</u>**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஓட்டிச்சென்ற வாகனம் டீ.வி.எஸ் ஸ்டார் சிட்டி. அது 100 சி.சி திறன் கொண்ட கியர் வாகனம் என்றால் சரி. விபத்து நடந்தபோது எனக்கு வயது 17 நடக்கும்போது என என்னுடைய சத்தியபிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரி. மசாஆ 20 ஆவணத்தின்படி பிறந்த தேதி 12.06.2001 என காணப்படுகிறது என்றால் சரி. விபத்து நடந்த தேதி 21.09.2018 ல் எனக்கு வயது 17 என்றால் சரி. என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ராணிப்பேட்டை வட்டாரபோக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வாங்கினேன். ஏப்ல் 2018ல் ஓட்டுநர் உரிமம் வாங்கினேன். என்னுடை ஓட்டுநர் உரிமத்தின் நகல் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இந்த விபத்து ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கியதால் என்னுடைய அஜாக்கிருதையால் நடந்துள்ளது என்றால் சரியல்ல. இறந்த நபர் தலைக்கவசம்அணியாமல்சென்றதால் தலைக்காயம் ஏற்பட்டு இறந்துள்ளதால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.